முழுப் பதிப்புரிமையுடைது / සියලුම හිමිකම් ඇවිරිණි / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் / Provincial Department of Education - NWP / வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் / Provincial Department of Education - NWP / வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் / Provincial Department of Education - NWP / வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் / Provincial Department of Education - NWP / வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

மூன்றாம் தவணைப் பரீட்சை - 2022 (2023)
தரம் : 11

சுட்டெண்...

வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் - I
ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය - I

நேரம்: 1 மணித்தியாலம்

* சகல வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
* இலக்கம் 1 முதல் 40 வரையிலான வினாக்களுக்கு 1, 2, 3, 4 என வழங்கப்பட்டுள்ள விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க

♦ பின்வரும் நிகழ்வின் உதவியுடன் வினா இலக்கம் 01 தொடக்கம் 06 வரையான வினாக்களுக்கு வடையளிக்கவும்.

வெளிநாட்டு நாணயமாற்று வீதங்கள் அதிகரித்தமை காரணமாக (டொலரின் பெறுமதி) உலகச் சந்தையில் ஒரு பீப்பா மசகு எண்ணெயின் விலை அதிகரித்தது. இதனால் நாட்டில் எரிபொருட்களின் விலைகளை அதிகரிக்க வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டது. எரிபொருட்களின் விநியோகம், களஞ்சியப்படுத்தல் என்பவற்றில் ஏற்பட்ட குறைபாடு காரணமாக இலங்கை போக்குவரத்துச் சபைக்குப் சொந்தமான பேருந்துகளில் தமது அனைத்துப் பயணங்களையும் மேற்கொள்ள வேண்டிய நிலை பொது மக்களுக்கு ஏற்பட்டது.

01. மேலே தரப்பட்ட நிகழ்வில் தேவையாக குறிப்பிடப்படுவது,
   1. கனிய எண்ணெய் 2. போக்குவரத்து 3. உணவு 4. தொடர்பாடல்

02. பேருந்து வண்டி எவ்வுற்பத்திக் காரணிக்குரியது?
   1. மூலதனம் 2. உழைப்பு 3. நிலம் 4. முயற்சியாண்மை

03. A – வெளி நாட்டு நாணய மாற்று வீதம் அதிகரித்தமை
   B – உலகச் சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின்விலை அதிகரித்தமை.
   C – எரிபொருட்களின் விலை மட்டம் அதிகரித்தமை
   மேலே தரபட்பட்ட காரணிகளுள் பொருளாதாரச் சூழல் காரணிக்குரிய காரணியாக அமைவது,
   1. A,B 2. B,C 3. B 4. A,C

04. இலங்கைப் போக்குவரத்துச் சபை தொடர்பிலான பின்வரும் கூற்றுக்களுள் பிழையான கூற்று எது?
   1. உழைக்கின்ற இலாபத்தில் ஒரு பகுதி அரசின் ஒன்றிணைந்த நிதியில் செலவு வைக்கப்படும்
   2. விசேட அல்லது பொது பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்படுகிறது.
   3. சட்ட ஆளுமை காணப்படாமை
   4. தொடர்ந்தியங்கும் தன்மை காணப்படல்

05. எரிபொருட்கள் போக்குவரத்தின் எவ்வடிப்படைக்குரியது?
   1. ஊடகம் 2. வழி 3. வலு 4. தரிப்பிடம்

06. எரிபொருட்களின் விநியோகம் மற்றும் களஞ்சியப்படுத்தல் உரித்தாகும் சந்தைப்படுத்தல் கலவையாது?
   1. உற்பத்திப் பொருள் 2. விலை 3. மேம்பாடு 4. இடம்

07. வணிகத்தின் பலமொன்றாக அமைவது,
   1. வணிகத்திற்கு வரிச் சலுகைகளை வழங்கல்
   2. சர்வதேச சந்தைக்கு தடைகளை விதித்தல்
   3. ஏற்றுக் கொள்ளப்பட்ட வியாபாரச் சின்னமொன்று காணப்படல்
   4. அரசு குறைந்த வட்டி வீதத்தை அறிமுகப்படுத்தல்.

08. பெரேரா அன்ட் கம்பனி,
   1. கூட்டிணைக்கப்பட கம்பனியொன்றாகும்.   2. பங்குடமை வணிகமாகும்.
   3.. அரச கம்பனியாகும்   4. தனியுரிமை வணிகமாகும்.

09. வணிக அமைப்புக்கள் சில பின்வருமாறு
   A – பங்குடமை   B – அரச கம்பனி   C – தனியுரிமை வணிகம்
   D - கூட்டுறவு   E – வரையறுக்கப்பட்ட கம்பனி   F – திணைக்களம்
   இவற்றுள் பொதுத் துறை சார்ந்த வணிக அமைப்புக்கள் எவை?
   1. A,C   2. B,F   3. D,F   4. B,F,G

10. காப்புறுதி நிறுவனமொன்றினால் வெளியிடப்பட்ட விளம்பர அறிவித்தலொன்று கீழே தரப்பட்டுள்ளது. ‘இடரொன்று ஏற்பட்டவுடன் உங்களுக்கு காப்புறுதி பணத்தைப்பெற்றுக் கொள்ள முடியும். எனினும், காப்புறுதி ஒப்பந்தத்தை இன்னொருவருக்கு காட்டுதல் செய்ய முடியாது. காப்புறுதிப் பணத்திற்கு மேலதிகமாக மேலதிகக் கொடுப்பனவுகள், வட்டி போன்ற அனுகூலங்களையும் உங்களுக்கு பெற்றுக் கொள்ள முடியும்’

   மேலே தரப்பட்ட கூற்றில் இலக்காகக் கொள்ளப்படுகின்ற காப்புறுதி எது?
   1. மோட்டார் காப்புறுதி   2. தீயபாயக் காப்புறுதி
   3. ஆயுள் காப்புறுதி   4. கடலபாயக் காப்புறுதி

11. காசோலையில் கோடிடப்படுகின்ற சில முறைகள் கீழே தரப்படுகின்றன. இவற்றுள் சிறப்பு முறைக் கோடிடல் அல்லாதது,



12. இலத்திரனியல் பணம் என்பது,
   1. டெலர் அட்டை, வரவு அட்டை என்பவற்றின் மூலம் பணம் செலுத்துதல்.
   2. தன்னியக்க டெலர் அட்டையினூடாக பணம் செலுத்துதல்.
   3. காசு, காசோலைகளுக்குப்பதிலாக பதிலீடு செய்யக் கூடிய இலத்திரனியல் கொடுப்பனவாகும்.
   4. காசுக்குப்பதிலாகப் பயன்படுத்தக் கூடிய கடன் அட்டையினூடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவாகும்.

13. பின்வரும் தொடர்பாடல் முறைகளும் இலத்திரனியல் தொடர்பாடல் முறையல்லாது.
   1. வானொலி   2. ஒலிபெருக்கி   3. பக்ஸ்   4. கருத்தரங்கு

14. மோட்டார் போக்குவரத்திற்கு எரிபொருட்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக சூரிய சக்தி முறைமையினை அறிமுகப்படுத்துவது எப் போக்குவரத்து அடிப்படைக்குரியது?
   1. வலு   2. பாதை   3. ஊடகம்   4. தரிப்பிடம்

15. கீழே X நிரலில் முகாமைத்துவக் கருமங்களும் Y நிரலில் அந்த ஒவ்வொரு முகாமைத்துவக் கருமங்களுக்கும் பொருந்தக் கூடிய கருமங்களும் காட்டப்பட்டுள்ளன.

X	Y
1. திட்டமிடல்	A – சந்தைப்படுத்தல் முகாமையாளர் ஊழியர் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்
2. ஒழுங்கமைத்தல்	B – 10% த்தினால் விற்பனையை அதிகரிக்க தீர்மானித்தல்.
3. நெறிப்படுத்தல்	C — விற்பனை அதிகரிப்பு வீதத்தை பரீட்சித்தல்
4. கட்டுப்படுத்தல்	D – வியாபாரத்திற்கு உதவியாளர்களை இணைத்துக் கொள்ளல்

மேலே X நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவக் கருமங்களுக்கு Y நிரலிலுள்ள கருமங்கள் முறையாகப் பொருந்தும் விடையாவது,

1) BDCA 2) BDAC 3) BADC 4) BCAD

16. பின்வரும் சந்தர்ப்பங்களுள் மொத்த வியாபாரத்தினை குறிப்பிடுகின்ற சந்தர்ப்பமாக அமைவது.
   1. கோழிப்பண்ணை உரிமையாளர் ஒருவர் கோழிகளின் உணவிற்காக கோழித்தீன்களின் பொதிகள் 50 இனை விற்றல்
   2. பால் மாடு வளர்ப்பு பண்ணை உரிமையாளர் ஒருவர் 25 தயிர் சட்டிகளை விற்பனைக்காக தெருத் தெருவாகச் சென்று விற்பனை செய்யும் விற்பனையாளருக்கு விற்றல்.
   3. சபுமல் என்பவர் புகையிரதப் பயணிகளுக்கு வடைகளை விற்பனை செய்தல்.
   4. செங்கல் உற்பத்தியாளர் வணிகக் கட்டடமொன்றை அமைப்பதற்கு ஒரு இலட்சம் செங்கற்களை விற்பனை செய்தல்

17. வணிகமொன்றின் சொத்திலும், பொறுப்பிலும் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய கொடுக்கல் வாங்கல் எது?
   1. உரிமையாளர் ரூபா 100,000 மூலதனமிடல்
   2. மின்சாரக் கட்டணம் செலுத்தியது ரூபா 5000
   3. வங்கிக் கடன் மீளச் செலுத்தியது ரூபா 15,000
   4. காரியாலய உபகரணங்கள் காசுக்கு கொள்வனவு ரூபா 50,000

18. வணிகமொன்றின் மொத்தச் சொத்துக்களிலிருந்து வெளிப்பொறுப்புகளை கழிக்கும் போது வரும் தொகையானது,
   1. செலவு எனப்படும்
   2. வருமானம் எனப்படும்
   3. உரிமை எனப்படும்
   4.. நடைமுறை அல்லாப் பொறுப்பாகும்.

19. குறைதல் - செலவு என்றும் அதிகரித்தல் வரவு என்றும் இரடடைப் பதிவுத் தத்துவத்திற்கமைய பதிவு செய்யப்படுகின்ற கணக்குகளை உள்ளடக்கிய விடை எது?
   1. கடன் கொடுநர் கணக்கு, வங்கிக் கடன் கணக்கு, மூலதனம்
   2. கடன்படுநர் கணக்கு, காசுக்கணக்கு, அலுவலக உபகரணக் கணக்கு
   3. கடன்படுநர் கணக்கு, கடன் கொடுநர் கணக்கு, வங்கிக் கடன் கணக்கு
   4. விற்பனைக் கணக்கு, சம்பளக் கணக்கு, பற்றுக் கணக்கு

♦ பின்வரும் தகவல்களின் உதவியுடன் 20ம் - 22ம் வினாக்களுக்கு விடையளிக்குக.
தளபாட விற்பனை வணிகமொன்றில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A – வங்கிக் கடன் எடுத்தது ரூபா 50,000
B - ரூபா 20,000 பொறுமதியான தளபாட உபகரணங்கள் ரூபா 30,000 விற்கு கடனுக்கு விற்பனை.
C – காசுக்கு விற்பனை செய்த தளபாட உபகரணங்கள் ரூபா 600,000
D – மின்சாரக் கட்டணம் செலுத்தியது ரூபா 4,000

20. மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுள் கணக்கீட்டுச் சமன்பாட்டின் சொத்தில் அதிகரிப்பை ஏற்படுத்தக் கூடிய கொடுக்கல் வாங்கல் எது?
   1. A 2. B 3. C 4. D

21. மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் பின்னர் கணக்கீட்டுச் சமன்பாட்டில் உரிமையாண்மையில் ஏற்படுகின்ற அதிகரிப்பு எவ்வளவு?
   1. ரூ. 4000 2. ரூ. 6000 3. ரூ. 10000 4. ரூ. 60000

22. மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற முன்னர் இவ்வணிகத்தின் காணப்பட்ட சொத்:துக்களின் பெறுமதி ரூ. 90,000 ஆகும். மேலே தரப்பட்ட கொடுக்கல வாங்களின் பின்னர் சொத்துக்களின் பெறுமதி யாது?
    1. ரூ. 96,000　　2. ரூ. 146,000　　3. ரூ. 150,000　　4. ரூ. 226,000

♦ பின்வரும தகவல்களின் உதவியுடன் 23ம் 24ம் வினாக்களுக்கு விடையளிக்குக.

கொடுக்கல் வாங்கல்கள்	மூல ஆவணங்கள்
1. சம்பளம் கொடுத்தது ரூ. 40,000	A – கொள்வனவுப்பட்டியல்
2. ருவனிடம் கடன் கொள்வனவு ரூ. 5000	B – பற்றுச் சீட்டு
3. காசு விற்பனை ரூ. 15,000	C – கொடுப்பனவுக் கைச்சாத்து
4. உரிமையாளர் பற்றிய பொருட்கள் ரூ. 1000	D – பொது நாட்குறிப்புக் கைச்சாத்து

23. மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் ஒழுங்கு முறைக்கேற்ப மூல ஆவணங்களை சரியாகப் பொருத்தினால் வரும் விடை,
    1. C,A,B,D　　2. C,D,B,A　　3. D,A,B,C　　4. D,C,B,A

24. மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்ய வேண்டிய முதன்மை ஏடுகளை முறையாகக் காட்டியுள்ள விடை யாது?
    1. காசேடு, கொள்வனவு நாட்குறிப்பேடு, காசேடு, பொது நாட்குறிப்பேடு
    2. காசேடு. கொள்வனவு நாட்குறிப்பேடு, விற்பனை நாட்குறிப்பேடு, பொது நாட்குறிப்பேடு
    3. காசேடு, விற்பனை நாட்குறிப்பேடு, காசேடு, பொது நாட்குறிப்பேடு
    4. காசேடு, விற்பனை நாட்குறிப்பேடு, பொது நாட்குறிப்பேடு, காசேடு

25. ரவி வணிகம் ரூபா 15,000 பொருட்களை காசுக்கு விற்பனை செய்கின்றது. விற்பனைக்காக கிடைத்த காசோலை வங்கியில் வைப்பிலிடப்பட்டது. இதற்குரிய சரியான இரட்டை பதிவு,
    1. வங்கிக் கணக்கு வரவு ரூ. 15,000　　காசுக்கணக்கு செலவு　ரூ. 15,000
    2. வங்கிக் கணக்க வரவு ரூ 15,000　　விற்பனைக் கணக்கு செலவு ரூ. 15,000
    3. வங்கிக் கணக்கு வரவு ரூ. 15,000　　ரவியின் கணக்கு செலவு　ரூ. 15,000
    4. காசுக்கணக்கு வரவு ரூ. 15,000　　வங்கிக் கணக்கு செலவு　ரூ. 15,000

26. வணிகமொன்றில் 2022.01.31 இல் சில்லறைக்காசு மீதி ரூ. 350 ஆகும். மே மாதத்தில் சில்லறைக் காசுச் செலவுகளின் பெறுமதி மொத்தம் ரூ. 7150 ஆகும். அவ்வணிகத்தின் சில்லறைக் காசு வசக்கட்டின் பெறுமதி யாது?
    1. ரூ. 350　　2. ரூ. 6800　　3. ரூ. 7150　　4. ரூ. 7500

27. வணிகமொன்று அதன் பாவனைக்காக ரூபா 50,000 பெறுமதியான இயந்திரமொன்றைக் கடனுக்கு கொள்வனவு செய்தது. இதனைப்பதிவு செய்வதற்குரிய முதன்மை ஏடு எது?
    1. காசேடு　　2. வங்கிக் கணக்கு
    3. பொது நாட்குறிப்பேடு　　4. கொள்வனவு நாட்குறிப்பேடு

28. வணிகமொன்றின் 2022.05.31 இல் வங்கிக் கணக்கின் மீதி ரூபா 2500 ஆகும். எனினும் அம்மாதத்திற்கான வங்கிக் கூற்று மீதி ரூபா 20,500 ஐக் காட்டியது, இவ் வேறுபாட்டிற்குக் காரணமாக அமையக் கூடியது,
    1. கடன்பட்டோரொருவர் நேரடியாக வங்கிக்கு அனுப்பியிருந்த நேரடி வைப்பு ரூ. 2,000
    2. வங்கி அறவிட்ட வங்கிக் கட்டணம் ரூ. 2,000
    3. வைப்புச் செய்யப்பட்ட ரூ. 2,000 காசோலையானது வங்கியினால் தீர்வை செய்யப்பட்டவில்லை
    4. நிலையியற் கட்டளையின் பேரில் வங்கி செலுத்திய காப்புறுதி கட்டணம் ரூ. 2,000

- 29ம் 30ம் வினாக்களுக்கு பின்வரும் தகவல்களின் உதவியுடன் விடையளிக்கவும்.
  வணிகமொன்றில் நிகழ்ந்த வழுவொன்றைத் திருத்துவதற்கு பின்வரும் பொது நாட்குறிப்புப்பதிவு பயன்படுத்தப்பட்டள்ளது.

கட்டட வாடகை வரவு	ரூ. 4000
தொங்கல் கணக்கு செலவு	ரூ. 4000

29. இக் கணக்கீட்டு வழு காரணமாக,
    1. பரீட்சை மீதி சமப்படும்
    2. பரீட்சை மீதியின் வரவுப் பக்கம் ரூபா. 4000 வினால குறைந்திருக்கும்.
    3. பரீட்சை மீதியின் செலவுப் பக்கம் ரூபா. 4000 வினால் குறைவடைந்திருக்கும்
    4. பரீட்சை மீதியின் வரவுப் பக்கம் ரூபா 4000 வினால் அதிகரித்திருக்கும்.

30. மேலே வழுக்களைத் திருத்துவதற்குரிய நாட்குறிப்புப் பதிவூடாகத் திருத்தப்பட்ட கணக்கீட்டு வழு யாது?
    1. கட்டட வாடகை செலுத்தியது ரூ. 4000 ஏடுகளில் முற்றாகப் பதிவு செய்யப்படவில்லை.
    2. கட்டட வாடகை செலுத்தியது ரூ. 4000 வாடகைக் கணக்கில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது.
    3. கட்டடவாடகைச் செலுத்தியது ரூ. 4000 வாடகைக் கணக்கில் இரு முறை பதிவு செய்யப்பட்டடிருந்தது,
    4. கட்டட வாடகை செலுத்தியது ரூ. 4000 வாடகை கணக்கில் மாத்திரம் பதிவு செய்ய்பபட்டிருந்தது,

31. விளையாட்டுக் கழகமொன்றின் அங்கத்தவர்கள் எண்ணிக்கை 120 பேர் ஆகும்.
    அங்கத்தவர் ஒருவரின் வருடாந்த சந்தா ரூ. 500 ஆகும்.
    2022 ம் வருடத்தில் இரு அங்கத்தவர்கள் வருடாந்த சந்தாவைச் செலுத்தவில்லை.
    2022ம் வருடத்தில் வருமானக் கூற்றில் காட்ட வேண்டிய அங்கத்தவர் சந்தா எவ்வளவு?
    1. ரூ. 1000 2. ரூ. 59,000 3. ரூ. 60,000 4. ரூ. 61,000

♦ 32ம் 33ம் வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களைத் துணையாகக் கொள்க.
வீட்டுப்பாவனைப் பொருட்களை உற்பத்தி செய்யும் வணிகமொன்றின் 2022.03.31 இல் முடிவடையும் மாதத்திற்கு ரூ. 10 மேசைகளை உற்பத்தி செய்வதற்கு ஏற்பட்ட செலவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

மரப்பலகைகள்	- ரூ. 200,000
ஏனைய நேர் பொருட்கள்	- ரூ. 30,000
மேசை செய்பவருக்கான கூலி	- ரூ. 75,000
கட்டட வாடகை	- ரூ. 10,000 (மாதாந்தம்)
இயந்திர காப்புறுதி	- ரூ. 2000 (மாதாந்தம்)
மின்சாரச் செலவு	- ரூ. 8000 (மாதாந்தம்)

32. இவ்வணிகத்தின் மூலக்கிரயம் எவ்வளவு?
    1. ரூ. 200,000 2. ரூ. 275,000 3. ரூ. 305,000 4. ரூ. 325,000

33. வணிகத்தில் உற்பத்தி செய்த மேசையொன்றிற்குக் கிரயத்தில் 10% இலாபம் வைத்து விலை தீர்மானிக்கப்படுகின்றது. மேசையொன்றிற்கான கிரயமும், விற்பனை விலையும் முறையே எவ்வளவு?
    1. ரூ. 20,000 உம் ரூ. 22,000 உம் ஆகும். 2. ரூ. 20,500 உம் ரூ. 30,250 உம் ஆகும்.
    3. ரூ. 32,500 உம் ரூ. 35,750 உம் ஆகும். 4. ரூ. 35,500 உம் ரூ. 35,250 உம் ஆகும்.

34. ரங்கன் வணிகத்தின் இயந்திரமொன்றின் கிரயம் ரூ. 320,000 ஆகும். இயந்திரத்தின் இழிவுப் பெறுமதி ரூ. 20,000 ஆகும். பயன்படு ஆயுற்காலம் 05 வருடங்கள் ஆகும். வருடாந்த தேய்வு எவ்வளவு?
    1. ரூபா 4000 2. ரூபா 60,000 3. ரூபா 68,000 4. ரூபா 70,000

35 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் தகவல்களைத் துணையாகக் கொள்க.

♦ லங்கா வணிகத்தின் 2021.12.31 இல் தயாரித்த பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

கணக்கின் பெயர்	வரவு (ரூபா)	செலவு (ரூபா)
மூலதனம்		802 000
விற்பனை		500 000
கொள்வனவு	120,000	
கட்டடம் (கொள்விலை)	800,000	
மோட்டார்	400,000	
மின்சாரம்	20,000	
சம்பளம்	70,000	
விளம்பரம்	15,000	
உட் சுமைக் கடன்	10,000	
சரக்கிருப்பு 21.01.01	30,000	
10% வங்கிக்கடன்		180 000
வங்கிக் கடன் கூலி	12,000	
கடன்பட்டோர்	40,000	
கடன் கொடுனர்		35 000
	1,517,000	1,517,000

மேலதிகத் தகவல்கள்

- 2022.12.31 இல் சரக்கிருப்பு ரூ. 25,000
- நிலையான சொத்துக்களுக்கு வருடாந்தம் 10% தேய்விடப்படும்

35. லங்கா வணிகத்தின் 2021.12.31 ல் முடிவடையும் வருடத்திற்கான விற்பனைக் கிரயம் எவ்வளவு?
 1. ரூ. 25,000 2. ரூ. 135,000 3. ரூ. 365,000 4. ரூ. 50,000

36. 2021.12.31 ல் முடிவடையும் வருடத்திற்கான வணிகத்தின் தேறிய இலாபம் எவ்வளவு?
 1. ரூ. 122,000 2. ரூ. 133,000 3. ரூ. 365,000 4. ரூ. 500,000

37. 2021.12.31 இல் லங்கா வணிகத்தின் உரிமையாண்மையின் பெறுமதி எவ்வளவு?
 2. ரூ. 135,000 2. ரூ. 365,000 3. ரூ. 802,000 4. ரூ. 924,000

38. இவ்வணிகத்தின் 2021.12.31 இல் நடைமுறை அல்லாச் பொறுக்களின் பெறுமதி யாது?
 1. ரூ. 6000 2. ரூ. 35,000 3. ரூ. 47,000 4. ரூ. 180,000

39. லங்கா வணிகத்தின் 2021.12.31 இல் நடைமுறை அல்லாச் சொத்தக்களின் பெறுமதி எவ்வளவு?
 1. ரூ. 360,000 2. ரூ. 720,000 3. ரூ. 1,080,000 4. ரூ. 120,000

40. லங்கா வணிகமானது இவ்வருடத்தினுள் ரூ. 140,000 நட்டமடைந்து, உரிமையாளர் ரூ. 20,000 வை பற்றியிருப்பின் 2021.12.31 இல் இவ்வணிகத்தின் உரிமையாண்மையின் பெறுமதி யாது?
 1. ரூ. 802,000 2. ரூ. 642,000 3. ரூ. 780,000 4. ரூ. 800,000

முழுப் பதிப்புரிமையுடைது / සියලුම හිමිකම් ඇවිරිණි / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் / Provincial Department of Education - NWP / வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் / Provincial Department of Education - NWP / வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் / Provincial Department of Education - NWP / வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் / Provincial Department of Education - NWP / வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

மூன்றாம் தவணைப் பரீட்சை - 2022 (2023)
தரம் : 11

சுட்டெண்.................................

வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் - II
ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය - II

நேரம்: 2 மணித்தியாலம்

கவனிக்கவும் :-
முதலாம் வினா உட்பட பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

---

01. பின்வரும் நிகழ்வின் உதவியுடன் வினா இல்ககம் 1 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.

தற்போது நாட்டில் காணப்படுமகின்ற மின்சாரப் பிரச்சினைக்குத் தீர்வாக மின்னியல் நுட்ப முறைகள் தொடர்பில் பட்டத்தைப் பெற்றுள்ள தீபால் மின்சாரத் துண்டிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் தொடர்ந்தும் எரியக் கூடிய (Rechargable) மின்குமிழ்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்ற வணிகமொனறை 'தீபால் மின்குமிழ் உற்பத்தியாளர்' எனும் பெயரில் 2022.07.01 இல் ஆரம்பித்தார். குறித்த திகதியிலேயே அவரிடம் காணப்பட்ட ரூ. 120,000 பெறுமதியான உபகரணங்களையும், பணமாக ரூ. 200,000 வையும் வங்கிக் கடனாகப் பெற்ற ரூ. 100,000 பணத்தையும் (வங்கிக் கடனுக்கான வருடாந்த வட்டி 6%) முதலீடு செய்து ஆரம்பித்தார். இவ்வணிகத்திற்கு மின்குமிழ் உற்பத்தி தொடர்பான அனுபவம் பெற்ற ஊழியர் ஒருவரும் மேலதிக உதவியாளரொருவரும் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

2022.07.31 இல் முடிவுற்ற மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றன.

மூலப்பொருட்களின் கொள்வனவு	- ரூ. 125,000
தொழிற்சாலை வாடகை	- ரூ. 11,000
மின்குமிழ் உற்பத்தியாளர் சம்பளம்	- ரூ. 45,000
உதவியாளர் சம்பளம்	- ரூ. 26,000
மின்கட்டணம்	- ரூ. 4000
மின் குமிழ் பெட்டிக்கான செலவுகள்	- ரூ. 13,000

மேலதிகத்தகவல்கள்:
1. உபகரணங்களுக்கு வருடாந்தம் 10% தேய்விடப்படல் வேண்டும்
2. வங்கிக் கடனுக்கான வட்டி ஜூலை 31 வரை செலுத்தப்படவில்லை

இம்மாதத்தினுள் கொள்வனவு செய்த மூலப்பொருட்கள் சகலவற்றையும் பயன்படுத்தி 100 மின்குமிழ்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. அவை சகலதும் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மின் குமிழொன்றிற்கு கிரயத்தில் 20% இலாபம் கிடைக்கும் வகையில் விற்பனை விலை தீர்மானிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் மாதத்திலிருந்து இணைய வெப் தளமொன்றை உருவாக்கி இணைய வலையமைப்பினூடாக நிகழ்நிலை (Online) முறை மூலம் விற்பனைகளை மேற்கொள்வதற்கு அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

1) அ) 'தீபால் மின்குமிழ் உற்பத்தியாளர்' எவ்வகை வணிக அமைப்பு வகையைச் சேர்ந்தது.
   ஆ) இவ்வணிகத்தின் அனுகூலமொன்றையும், பிரதிகூலமொன்றையும் தருக.
2) அ) 'தீபால் மின்குமிழ் உற்பத்தியாளர்' வணிகத்தின் பலம் ஒன்றையும், வாய்ப்பொன்றையும் தருக.
   ஆ) இவ்வணிகத்தில் அக்கறை காட்டும் இரண்டு பிரிவினரைத் தருக.
3) அ) இவ்வணிகத்தைப் பதிவு செய்ய வேண்டுமா? தேவையில்லையா? என்பதைக் குறிப்பிட்டு அது தொடர்பிலான சட்ட நிலமையினை விளக்குக.
   ஆ) கணனி வெப்தளம்' உள்ளடங்குகின்ற தொடர்பாடல் ஊடகத்தைக் குறிப்பிடுக.

4) அ) நிகழ்வினுள் உள்ளடங்கியுள்ள முகாமைத்துவக் கருமங்களான திட்டமிடல் மற்றும் ஒழுங்கமைப்பிற்குரிய இரண்டு கருமங்களைத் தருக.

ஆ) A – 20% இலாபத்துடன் விலையினை நிர்ணயித்தல்

B – மீள் இயங்கக் கூடிய மின் குமிழ்கள்

மேலே தரப்பட்ட காரணிகளுள் உள்ளடங்கியுள்ள சந்தைப்படுத்தல் கலவைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

5) 2022.07.01 இல் கணக்கீட்டுச் சமன்பாட்டினை பெறுமதிகளுடன் எழுதிக்காட்டுக.

6) அ) 2022 ஜுலை மாதத்திற்குரிய வங்கிக் கடன் வட்டியினைக் கணிக்க.

ஆ) அட்டுறு வங்கிக் கடன் வட்டியினை ஏடுகளில் பதிவு செய்வதற்குரிய பொது நாட்குறிப்பேட்டுப் பதிவினைத் தருக.

7) அ) இவ்வணிகத்திலுள்ள நடைமுறையல்லாச் சொத்தொன்றையும், நடைமுறைப் பொறுப்பொன்றையும் தருக.

ஆ) செலுத்திய தொழிற்சாலை வாடகையுடன் தொடர்புபடுகின்ற மூல ஆவணம், மற்றும் மூல ஏட்டினைத் தருக.

8) அ) மின்குமிழொன்றை உற்பத்தி செய்வதற்குரிய உற்பத்திக் கிரயத்தைக் கணிக்க.

ஆ) மின்குமிழொன்றின் விற்பனை விலையைக் கணிக்க.

9) 'தீபால் மின் குமிழ் உற்பத்தியாளர்' வணிகத்தின் 2022.07.31 இல் காசு மீதியைக் கணிக்க.

10) அ) 2022.07.31 இல் இவ்வணிகத்தின் தேறிய இலாபத்தைக் கணிக்க.

ஆ) 2022.07.31 இல் இவ்வணிகத்தின் உரிமையாண்மையின் பெறுமதியினைக் கணிக்க.

(2 X 10 = 20)

பகுதி I – வணிகக்கல்வி

(இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.)

02. 1) அ) மனித தேவைகள் என்றால் என்ன?

ஆ) மனித தேவைகளின் இரு இயல்புகளைத் தருக.

2) பின்வரும் கூற்றுக்கள் உண்மை அல்லது பொய் என்பதைக் குறிப்பிடுக.

அ) வணிகங்களுக்கு மனித தேவைகளை உருவாக்க முடியாது என்பதுடன் மனித விருப்பங்களை உருவாக்க முடியும்.

ஆ) வணிகமொன்றின் வாடிக்கையாளர்கள் அவ்வணிகத்தின் அகச் சூழல் காரணிகளாகும்.

இ) சகல வணிகங்களும் இலாபத்தை நோக்காகக் கொண்டே செயற்படுகின்றன.

ஈ) ஒரு நாடொன்றின் பொருளதார கருமங்களை நெறிப்படுத்துவதற்காக அரசு பின்பற்றுகின்ற கொள்கை அரசியல் சூழல் காரணிக்குரியாகும். (½ x 4 = 2)

3) பிரவீன்குமார் 'பிரவீன்' எனும் பெயரில் புத்தக விற்பனை வணிகமொன்றை பாடசாலைக்கு அருகாமையில் ஆரம்பிக்கின்றார். அவ்வணிகத்திற்குத் தேவையான புத்தகங்கள் நிச்சர்ட் கம்பனியினால் வழங்கப்படுகின்றது. பிரவீன் வணிகத்தின் ஊழியராக கமால் இணைத்துக் கொள்ளப்பட்டார். பாடசாலையில் கூடுதலான மாணவர்கள் நாளாந்தம் புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்கு இங்கு வருகை தருகின்றனர்.

அ) மேற்குறிப்பிட்ட வணிகத்தில் அக்கறை காட்டும் இரு பிரிவினரை நிகழ்விலிருந்து எடுத்துரைக்க.

ஆ) மேலே (3) (அ) வில் குறிப்பிட்ட அக்கறைக்காட்டும் பிரிவிர் பிரவீன் வணிகத்தில் அக்கறை காட்டுவதற்கான காரணத்தை தருக. (2 புள்ளிகள்)

4) நீண்ட காலமாக இலங்கையில் பொருட்கள் சேவைகளின் விலைகள் நாளாந்தம் வேகமாக அதிகரித்துச் செல்வதைக் காணக் கூடியதாக உள்ளது.

அ) பொது விலைமட்டம் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்கின்ற பொருளாதாரச் சூழற் காரணி யாது?

ஆ) பொருளாதாரச் சூழல் காரணியான வெளிநாட்டு நாணய மாற்று வீதம் என்றால் என்ன?

(2 புள்ளிகள்)

(மொத்தம் 8 புள்ளிகள்)

03, 1) அ) ஏற்றமதி, இறக்குமதி வியாபாரம் என்றால் என்ன விளக்குக.

ஆ) சில்லறை வியாபாரத்தை மொத்த வியாபாரத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டக் கூடிய இரு பண்புகளைத் தருக. (2 புள்ளிகள்)

2) பின்வரும் கூற்றுக்கள் 'உண்மை அல்லது பொய்' என்பதைக் குறிப்பிடுக.

அ) சேமிப்புக் கணக்குடன் ஒப்பிடும் போது நிலையான வைப்பிற்கு கூடுதல் வட்டி வழங்கப்படும்.

ஆ) தொடர்பாடல் என்பது நிறுவனமொன்றின் உள்ளகத்தரப்பினரும் வெளியகத்தரப்பினருக்குமிடையில் இடம் பெறுகின்ற தகவல் பரிமாற்றமாகும்.

இ) 'இழப்பீட்டுத் தத்துவம்' என்கின்ற காப்புறுதிக் கோட்பாடு ஆயுற் காப்புறுதிக்கு பொருத்தமற்றது.

ஈ) இலங்கை அரசு நவீன வசதிகளுடன் கூடிய விமான நிலையமொன்றை நிர்மாணித்துள்ளது. இது பாதை எனப்படுகின்ற போக்குவரத்தின் அடிப்படை அம்சத்திற்குரியதாகும்.

(½ x 4 = 2 புள்ளிகள்)

3) காசோலையொன்றில் கோடிடலின் மூலம் காசோளைக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுகின்றது.

அ) காசோலையொன்றுடன் தொடர்புடைய இரு பிரிவினரைத் தருக.

ஆ) காசோலையில் கோடிடும் இரு முறைகளைத் தருக. (2 புள்ளிகள்)

4) தற்காலத்தில் வங்கியில் நடைமுறைக் கணக்குகளைப் பேணுகின்ற வணிகங்களுக்கு வணிகவங்கிகள் பல்வேறு சேவைகளை வணிகச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக வழங்கி வருகின்றன.

அ) வணிக வங்கிகளிலிருந்து நடைமுறை வைப்பாளர்களுக்கு பெற்றுக் கொள்ளக் கூடிய இரண்டு சேவைகளைத் தருக.

ஆ) வணிக வங்கிகளினால் வழங்கப்படுகின்ற இலத்திரனியல் சேவைக்குரிய இரண்டு உதாரணங்களைத் தருக. (2 புள்ளிகள்)

04.. 1) அ) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி என்றால் என்ன?

ஆ) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் இரு அனுகூலங்களைத்தருக.

2) பின்வரும் கூற்றுக்கள் 'உண்மை அல்லது பொய்' என்பதைக் குறிப்பிடுக.

அ) இலங்கைப் பிணைகள் பரிமாற்று ஆணைக்குழுவானது இலங்கையின் நிதிமுறைமைகளை மேற்பார்வை செய்யும் நிறுவனமாகும்.

ஆ) திறைசேரி முறிகள் மத்திய வங்கியினால் வெளியிடப்படுகின்ற நீண்டகால பிணை முறியாகும்.

இ) இடம் என்பது சந்தைப்படுத்தல் கலவையின் மாறியொன்றாகும்.

ஈ) சில்லறை வியாபாரத்தை மொத்த வியாபாரத்திலிருந்து வேறுபடுத்தி இனம் காணக்கூடிய பிரதான காரணி கொள்வனவாளரின் நோக்கமாகும். (2 புள்ளிகள்)

3) அ) பின்வரும் வணிகங்களை இலாப நோக்குடைய, இலாப நோக்கமற்ற வணிகங்கள் என வகைப்படுத்திக் காட்டுக.

A - வரையறுக்கப்பட்ட அரலிய கம்பனி

B – கல்வித்திணைக்களம்

C – பெரேரா அன்ட் சன்ஸ் (பெரேராவும் அவர் பிள்ளைகளும்)

D – வரையறுக்கப்பட்ட திக்வெல்ல பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்.

ஆ) வணிகமொன்றின் பெயரினைப் பதிவு செய்வதனால் அவ்வணிகத்திற்கு பெற்றுக் கொள்ளக்கூடிய இரண்டு அனுகூலங்களைத் தருக. (2 புள்ளிகள்)

4). அ) முதலீடு என்றால் என்ன விளக்குக.

ஆ) பொருத்தமான முதலீட்டு முறையொன்றைத் தெரிவு செய்யும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய இரண்டு காரணிகளைத் தருக. (2 புள்ளிகள்)

(மொத்தம் 8 புள்ளிகள்)

பகுதி II – கணக்கீடு

(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக)

05. 1) சொத்தொன்றில் காணக்கூடிய இரு பண்புகளைத் தருக. (2 புள்ளிகள்)

2) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய இரட்டைப்பதிவுகளை எழுதுக.

அ) கடனுக்கு கொள்வனவு செய்த சரக்குகள் - ரூ. 15,000

ஆ) மீளச் செலுத்திய வங்கிக் கடன் - ரூ. 18,000(வட்டி இல்லை)

3) நாரதன் வணிகத்தின் 2022.01.01 இல காணப்பட்ட மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூபா 500,000 ஆகும். ஜனவரி மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன.

2022.01.05 இல் கடனுக்கு விற்பனை செய்த பொருட்கள் ரூபா 20,000

01.10 இல் ரூபா 8,000 பெறுமதியான பொருட்கள் ரூபா. 12,000 விற்கு விற்கப்பட்டன.

01.15 மின்சாரக் கட்டணம் செலுத்தியது ரூபா 2,000

01.20 கடன்கொடுநருக்கு செலுத்திய காசு ரூபா 30 000. கிடைத்த கழிவு ரூபா 3000

01.25 அலுவலக உபகரணங்கள் காசுக்கு கொள்வனவு ரூபா 50,000

அ) மேலே தரப்படட கொடுக்கல் வாங்கல்களை பின்வரும் முறையிலமைந்த கணக்கீட்டு சமன்பாட்டில் பதிந்து காட்டுக. (முதலாவது கொடுக்கல் வாங்கலைப்பதிவு செய்யும் முறை உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது)

திகதி	சொத்து =	பொறுப்பு +	உரிமையாண்மை
01.05	சரக்கிருப்பு + 20,000	கடன்கொடுநர் + 20,000	....
01.10			
01.15			
01.20			
01.25			

ஆ) மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்த பின்னர் வணிகத்தின் உரிமையாண்மையின் பெறுமதியினைக் கண்டு பிடிக்க. (4 புள்ளிகள்)

4) அமல் வணிகத்தில் 2022 மே மாதத்தில் இடம்பெற்ற கடன் கொள்வனவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

2022.05.08 – ரூபா 50,000 கிரயமுடைய பொருட்கள் (பட்டியல் இல 60) 5% வியாபாரக் கழிவுடன் சுரங்கவினால் கொள்வனவு செய்யப்படல்

2022.05.12 – ரூபா 80,000 வியாபாரப் பொருட்கள் ருவனிடமிருந்து (பட்டியல் இல் 60) கடனுக்கு கொள்வனவு

2022.05.15 – ரூபா 500,000 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் (நாட்குறிப்புக் கச்சாத்து) வணிகத்தின் பயன்பாட்டிற்காக ருவனிடமிருந்து கடனுக்குக் கொள்வனவு

வேண்டப்படுவது,

1) 2022 மே மாதத்திற்கு அமல் வணிகத்தின்

1. கொள்வனவு நாட்குறிப்போடு
2. கொள்வனவுக் கணக்கு
3. கடன்பட்டோனான சுரங்கவின் கணக்கு

06. 1) காசுக் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்கின்ற முதன்மை ஏட்டினையும் அதனுடன் தொடர்புபடுகின்ற மூல ஆவணங்களையும் தருக. (2 புள்ளிகள்)

2) சீமெந்தினைப் பயன்படுத்தி பூந்தொட்டிகளை உற்பத்தி செய்கின்ற இல்யாஸ் வணிகத்தின் 2022 ஜனவரி மாதத்திற்கான உற்பத்திச் செலவுகள் பின்வருமாறு,

சீமெந்து மற்றும் மணல் கொள்வனவுகள் - ரூ. 45,000

பூந்தொட்டிகளைச் செய்பவருக்கான கூலி - ரூ. 20,000

பூந்தொட்டிகளுக்கு நிறம் தீட்டும் செலவுகள் - ரூ. 5,000

மின்சாரக் கட்டணம் - ரூ. 1,000

காவலாளியின் சம்பளம் - ரூ. 10,000

மேலதிகத்தகவல்கள்

- சீமெந்து கலவை இயந்திரமொன்று முன்னைய வருடத்தில் ரூபா 200,000 விற்கு கொள்வனவு செய்யப்பட்டதுடன் அதற்கு வருடாந்தம் 12% தேய்விடப்படுகிறது.
- சகல மூலப்பொருட்களையும் பயன்படுத்தி மாதத்தினுள் 100 பூந்தொட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

வேண்டப்படுவது,

2022.01.31 இல் முடிவடையந்த மாதத்திற்கான உற்பததிக் கிரய அட்டவணை (2 புள்ளிகள்)

3) 2022.03.31 இல் ரங்கன் வணிகத்தின் வங்கிக் கணக்கின் மீதி ரூபா 81,000 வை சாதக மீதியாகக் காட்டியது. எனினும் அம்மாதத்திற்கான வங்கிக் கூற்றின் படி மீதியானது வங்கிக்ணக்கு மீதியிலிருந்து வேறுபட்டதாகக் காணப்பட்டது. அதற்கான காரணங்கள் பின்வருமாறு,

அ) கடன்பட்டோரொருவர் நேரடியாக வங்கிக்கு அனுப்பிய காசு ரூபா 15,000

ஆ) வங்கி அறவிட்ட காசோலைப் புத்தகக் கட்டணம் ரூபா 2,000

இ) வைப்புச் செய்யப்பட்டும் இன்னும் தீர்வையாகாத காசோலைகளின் பெறுமதி ரூபா 24,000

ஈ) வழங்கப்பட்டும் கொடுப்பனவிற்கு முன்வைக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூபா 18,000

வேண்டப்படுவது,

1. 2022.03.31 இல் வங்கிக் கணக்கின் மீதியனை சீராக்குதல்
2. 2022.12.31 இல் வங்கி இணக்கக் கூற்று (4 புள்ளிகள்)

4). ரஞ்சிதா வணிகத்தின் 2022.03.31 இல் தயாரித்த பரீட்சை மீதி சமப்படவில்லை. அவ்வேறுபாடுகள் தொங்கல் கணக்கில் பதிவு செய்யப்பட்டன. பின்னர் பின்வரும் வழுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

அ) ரூபா 5000 கடன் விற்பனை பட்டிலொன்று முற்றாக ஏடுகளில் பதிவு செய்யப்படவில்லை

ஆ) ரூபா 8000 காப்புறுதிக்கட்டணக் கணக்கு மீதியானது பரீட்சை மீதிக்கு கொண்டு செல்லப்படவில்லை

இ) பெற்ற வட்டி ரூபா 10,000 கொடுத்த வட்டிக் கணக்கில் பதிவு செய்யப்பட்டது.

ஈ) சம்பளக் கொடுப்பனவு ரூபா 3000 காசேட்டில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது,

1. மேலே தரப்பட்ட வழுக்களைத் திருத்துவதற்கான பொது நாட்குறிப்புப் பதிவுகள்
2. தொங்கல் கணக்கு (4 புள்ளிகள்)

07. 1) இலாப நோக்கற்ற வணிக நிறுவனங்கள் கொள்ளல் கொடுத்தல் கணக்கைத் தயாரிப்பதன் இரு நோக்கங்களைத் தருக. (2 புள்ளிகள்)

2) 'ஒற்றுமை' விளையாட்டுக் கழகத்தின் அங்கத்துவர் எண்ணிக்கை 150 பேராகும். ஒரு அங்கத்தவரின் மாதாந்த சந்தா ரூபா 100 ஆகும். 2022 ஜனவரி மாதத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு,

விளையாட்டு உபகரணங்களின் கொள்வனவு	ரூபா 6000
எழுதுகருவிகளின் கொள்வனவு	ரூபா 3000
கிடைத்த நன்கொடைகள்	ரூபா 8000
பத்திரிகை, சஞ்சிகை கொள்வனவு	ரூபா 4000

மேலதிகதகவல்கள்

- அங்கத்தவர்களில் 50 பேர் ஜனவரி மாதத்திற்கான அங்கத்தவர் கட்டணத்தைச் செலுத்தவில்லை
- 2022.01.01 இல் கொள்ளல் கொடுத்தல் கணக்கின் மீதி ரூபா 4000 ஆகும்.

வேண்டப்படுவது,

ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தின் 2022.01.31 இல் முடிவடைந்த மாதத்திற்கான கொள்ளல் கொடுத்தல் கணக்கைத் தயாரிக்க.

3. புத்திகா வணிகத்தின் 2021.12.31 இல் தயாரித்த பரீட்சை மீதி கீழே தரப்படுகின்றது.

பரீட்சை மீதி

கணக்கின் பெயர்	வரவு (ரூபா)	செலவு (ரூபா)
விற்பனை		180,000
சரக்கிருப்பு (2022.01.01 இல்)	10,000	
விளம்பரச் செலவு	7,000	
கொள்வனவு	37,000	
உட்சுமைக் கூலி	2,000	
10% வங்கிக் கடன்	.....	50,000
கடன் வட்டி	5,000	
காணி	100,000	
கட்டடம்	120,000	
ஊழியர் சம்பளம்	13,000	
கடன்பட்டோர்	45,000	
கடன் கொடுநர்	....	15,000
கொடுத்த கழிவு	3,000	
காசு	40,000	
மின்சாரம்	8,000	
மூலதனம்	....	145,000
	390,000	390,000

மேலதிகத்தகவல்கள்

1. 2021.12.31 இல் சரக்கிருப்பு ரூபா. 12000 ஆகும்.
2. கட்டடத்திற்கு வருடாந்தம் கிரயத்தில் 10% தேய்விடப்படல் வேண்டும்.
3. மின்சாரக் கடடணம் ரூபா. 2,000 நிலுவையாக உள்ளது.

வேண்டப்படுவது,

அ) 2021.12.31 இல் முடிவுற்ற வருடத்திற்கான இலாப நட்டக் கூற்று

ஆ) 2021.12.31 இல் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று (04)(மொத்தம் 12 புள்ளிகள்)

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம் - மூன்றாம் தவணைப் பரீட்சை 2022		
தரம் : 11	பாடம்: வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்	ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය
விடைகள்		

வினாப்பத்திரம் - 1

1) 2	6) 4	11) 1	16) 2	21) 2	26) 4	31) 3	36) 1
2) 1	7) 3	12) 3	17) 3	22) 2	27) 3	32) 2	37) 4
3) 4	8) 2	13) 4	18) 3	23) 1	28) 1	33) 4	38) 3
4) 3	9) 4	14) 1	19) 2	24) 1	29) 2	34) 2	39) 3
5) 3	10) 3	15) 2	20) 1	25) 2	30) 3	35) 2	40) 2

(1x40= 40 புள்ளிகள்)

வினாப்பத்திரம் - 2

01. 1) அ) தனியுரிமை, தனி, தனியாள் உரிமை வணிகம் (1 புள்ளி)

ஆ) அனுகூலங்கள் : இலகு ஆரம்பிக்க முடியும், சகல, இலாபமும் உரிமையாளருக் குரியது, வணிக இரகசியங்கள் பாதுகாக்கப்படும்.

பிரதிகூலங்கள் : வரையறுக்கப்படாத உரிமையாளர் பொறுப்பு, மூலதனத்தைப் பெற்றுக் கொள்வது, கடினம், நீண்ட ஆயுள் அற்றது. சட்ட ஆளுமையற்றது. (1/2 x 2 = 1 புள்ளி)

2) அ) பலம் - மின்சார தொழிநுட்பம் தொடர்பில் பட்டம் பெற்றிருத்தல், பயிறிசி பெற்ற ஊழியர், போதுமானளவ மூலதனம்.

வாய்ப்புக்கள் : நாட்டில் மின்சாரப் பிரச்சினைகள் காணப்படல் (1/2 x = 1 புள்ளி)

ஆ) உரிமையாளர், ஊழியர், நுகர்வோர், வங்கி, வழங்குநர்,

3) அ) பதிவு செய்தல் வேண்டும். பொருத்தமான பாரணம் குறிப்பிடப்பட்டிருப்பின் (1 புள்ளி)

ஆ) இலத்திரனியல் ஊடகம் (1 புள்ளி)

4) அ) பொருத்தமான உதாரணங்களுக்கு புள்ளி வழங்குக.

ஆ) A – விலையிடல், B – உற்பததி பொருள்

5)

சொத்து=		உரிமையாண்மை	+	பொறுப்பு
420,000	=	320,000	+	100,000
		அல்லது		
+200,000	=	+120,000		
+200,000		+200,000		
+100,000				100,000
....	=	....		....
420,000	=	320,000		100,000

6) அ) 100,000 x $\frac{6}{100}$ x $\frac{1}{12}$ ரூபா 500 (1 புள்ளி)

ஆ) வங்கிக் கடன் வட்டிக் கணக்கு வரவு ரூபா. 500

அட்டுறு வங்கிக் கடன் கணக்கு செலவு ரூபா 500

7) அ) உபகரணங்கள், அட்டுறு வங்கிக் கடன் வட்டி (1 புள்ளி)

ஆ) காசுக் கணக்கு வரவு, கொடுப்பனவுக் கைச்சாத்து (1 புள்ளி)

8) அ)

மூலப்பொருள்	125,000
உற். சம்பளம்	45,000
பொதிகட்டு பெட்டி	13,000
தொழிற்சாலைக் கூலி	11,000
உதவியாளர் சம்பளம்	26,000
மின் கட்டணம்	4,000
உபகரணத் தேய்வு	1,000
மொ. உற். கிரயம்	225,000

அலகுக்கான கிரயம் $\frac{225000}{100}$ = ரூபா 2250 (1 புள்ளி)

ஆ) அலகுக்காகன விற்பனை விலை = அலகுக்கிரயம் இலாபம்

அலகுக்கான இலாப எல்லை 2250 x $\frac{20}{100}$ ரு 450 (1.'.2 புள்ளி)

அலகொன்றின் விற்பனை விலை : 2250 450

காசுக்கணக்கு ரூ. 2700 (1 புள்ளி)

காசு - மூலதனம்	200,000	மூலப்பொருள்	125,000
வங்கிக் கடன்	100,000	தொழி. சா. வாடகை	11,000
விற்பனை	270,000	உற். சம்பளம்	45,000
		உதவிசம்பளம்	26,000
		மின்கட்டணம்	4,000
		பொதிசெய். செலவுகள்	130,000
		மீ. செ	346,000
	570,000		570,000

சரியானமீதி 346,000 இருப்பின் (02)

வணிகக்க கல்வி பகுதி II

02. 1) அ) தேவையினை நிறைவு செய்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற பல்வேறு முறைகள் விருப்பம் எனப்படும். (1 புள்ளி)
ஆ) பொருத்தமான பண்புகளுக்கு (1 புள்ளி)
2) அ) உண்மை ஆ) பொய் இ) பொய் ஈ) உண்மை
3) அ) உரிமையாளர் - புஸ்பகுமார் வழங்குனர் - றிச்சரட்
ஊழியர் - கமலா, வடிக்கையாளர் - பாடசாலை மாணவர்கள் (1 புள்ளி)
ஆ) அக்கறை காட்டுவதற்காக காரணிகள் (1 புள்ளி)
4) அ) ணவீக்கம் (1 புள்ளி)
ஆ) பொருத்தமான விளக்கம் (1 புள்ளி)

03. 1) அ) பொருத்தமான விளக்கம் (1 புள்ளி)
ஆ) நோக்கத்தின் அடிப்படையில் விற்பனை விலையின் அடிப்படையில், வழங்கப்படுகின்ற கழிவு, விற்பனை பொருட்களின் அளவு (1 புள்ளி)
2) அ) உண்மை ஆ) பொய் இ) பொய் ஈ) பொய் (2 புள்ளி)
3) அ) காசோலை பிற்பபிப்பவர், வங்கி, பணம் பெறுபவர்
ஆ) பொதுமுறைக் கோடிடல், சிறப்பு முறைக் கொடிடல் (1 புள்ளி)
4) அ) பொருத்தமான இரு ஆவணங்களுக்கு (1 புள்ளி)
ஆ) கடன் அட்டை, வரவு அட்டை, ATM Card (1 புள்ளி)

04. 1) அ) 2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்ற, சட்ட ஆளுமை,யுடைய, பொதுமக்களுக்கு பங்குகளை வழங்கி, மூலதனம் திரட்டுகின்ற, பொறுப்பு வரையளுக்கப்பட்ட கம்பனியாகும் (1 புள்ளி)
ஆ) பொருத்தமான இரண்டு அனுகூலங்களுக்கு (1 புள்ளி)
2) அ) உண்மை ஆ) பொய் இ) உண்மை ஈ) பொய் (2 புள்ளிகள்)
3) அ) இலாப நோக்குடன் இலாப சோக்கற்ற
a. வரையறுக்கப்பட்ட அரலிய கம்பனி b. கல்வித்திணைக்கனம்
c. அபேவர்தன .... d. பலநோக்கு கூட்டுறவு சங்கம் (01)
4) அ) தனி நபரொருவர் தான் உழைக்கும் வருமானத்தின் ஒருபகுதியை சேகரித்து பொருளாதார அனுகூலத்தை பெற்றுக் கொள்வதற்காக பயனுள்ள முதலீட்டு வாய்பொன்றில் முதலிடம் (01)
ஆ) முதலீட்டாளரின் நோக்கம், இடம் (1 புள்ளி)

கணக்கீடு – பகுதி II

05. 1) எதிர்காலக் கொடுகிகல் வாங்கலின் பெறுபேறாக அமைதல்
வணிகத்தின் கட்டுப்பாட்டில் இருத்தல்
எதிர்காலத்தில் பொருளாதார அனுகூலங்களை வணிகத்திற்கு கொண்டு வருதல். (02)

2) அ) கடன்பட்டோர் கணக்கு வரவு ரூ. 15,000
விற்பனைக் கணக்கு செலவு ரூ. 15,000 (01)

ஆ) வங்கிக் கடன் கணக்கு வரவு ரூ. 18,000
காசுக்கணக்கு செலவு ரூ. 18,000 (01)

திகதி	சொத்துக்கள்	பொறுப்புக்கள் ரூபா	உரிமையாளர்கள் (ரு)
01. 01	500,000	200,000	300,000
01. 05	சரக்கிருப்பூ 20,000	கடன்கொடுனர்+ 20,000	......
01. 10	சரக்கிருப்பு– 8000 கடன் படுனர் +12000	....	இலாபம் +4000
01. 15	காச– 2000	.....	மின்சாரம் - 2000 (½)
01. 20	காசு– 27,000	க. கொடுனர் - 30,000	கி. கழிவு+3000
01. 25	காசு– 50,000 அலு. உபக– 50,000	....	(½)

மொத்தஉரிமையாண்மை 305,000 (01) மொத்த 4 புள்ளிகள்)

அ)

திகதி	பங். இல	வழங்குனர்	பெறுமானம் (ரு)	பே. ப
06. 08 05.12 05.31	51 60 கொள	சுரங்க நுவண் க. இற்குமாற்று	475,000 80,000 127,500	(2 புள்ளிகள்)

ஆ) கொள்வனவுகணக்கு

22.08.11 க. கொ. 127,500	

(1 புள்ளி)

இ)

	5.8 கொள்ள475,000

(1 புள்ளி)(04)

06.. 1) சில்லறைக் காசேடு

சில்லைறைச் செலவுக் கைச்சாத்து (2 புள்ளிகள்)

நேர்.பொருள் - சீமெந்து,மணல்	45,000	
நேர் கூலி–தயாரி. கூலி	20,000	
மூலக்கிரயம்		65,000
நேரில் பொருள் - நிறப்பூச்சு	5000	
நேரில் கூலி–காலவ்,சம்பளம்	10000	
நேரில் ஏனைய –மின்சாரம்,	3000	
இயந். தேய்வு	2000	
உற்பத்திமேந்தலைகிரயம்		20,000
மொத்தஉற்பத்திக் கிரயம்		85,000

(02)

அட்டவணைகள்

www.e-kalvi.com